இப்படிச் செய்து சர்விஸ் இல்லாத அளவிற்கு பியூன்களுக்கும், வாட்ச்மேன் களுக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கி 'லோயர் கிரேட் கிளார்க்'குக்கு உண்டான சம்பளம் வழங்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இரண்டு பகுதிகளாக வேலைக்கு எடுக்கிறோம். முனிசிபாலிட்டிகளிலேயும், மற்ற நகரங் களிலேயும், சர்க்காரிலேயும் கூட சில ஸ்தாபனங்களில் டெம்பரரியாக புதிதாக வேலைக்கு எடுத்துச் செய்கிறோம். புதிதாக எஸ்டிமேட் போட்டு வேலை செய் தால் டெம்பரரியாக 3 மாதங்களுக்குத்தான் அந்த வேலையே இருக்கும். அப்படி அந்த வேலைகள் நடக்கும் நேரத்தில் டெம்பரரியாக வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்குவது என்றால் நிரந்தரமான காலி இடங்கள் வந்தால் நிரந்தரமாக்குவார்கள்.

Kothwal Market

*192 *Q*.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal for providing a modern market in the place of Kothwal Market in George Town; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, கொத்தவால் சாவடியில் நெருக்கடி அதிகமாக இருப்பதால் இப்பொழுது 'ஸூ' அமைந்திருக்கும் இடத்தில் கொத்தவால் சாவடியைக் கொண்டு செல்லும் செயற்குறிப்பு இருந்ததாகவும், 'ஸூ'-வை வேறு இடத்திற்குக் கொண்டு போவதற்கான செயற்குறிப்பு இருந்த தாகவும் நான் அறிகிறேன். அப்படி இல்லையென்றாலும்கூட, கொத்தவால் சாவடியின் உள்ளே சென்று பார்த்தால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது, எனவே உடனடியாக கொத்தவால் சாவடியை நல்ல காற்றோட்டமுள்ள தாராள இட வசதி நிறைந்த இடத்திற்கு மாற்றுவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப் பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அப்படி ஒரு யோசனை இருக்கிறது. கேசவ பிள்ளை பூங்காவில் 'சால்ட்குவாட்டர்ஸ்' பக்கத்தில் பெரிய மார்க்கெட்டை ஏற்படுத்த 46 இலட்சம் ரூபாயில் திட்டமிட்டு, எஸ்டிமேட் போடப்பட்டு அது பரிசிலனையில் இருந்து வருகிறது.

1975 மார்ச் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : I got the answer, Sir.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கொத்தவால் சாவடி வாணிகச் சந்தையில் தற்பொழுது எப்பொழுது பார்த்தாலும் சுத்தமில்லாமல் இருக்கிறது. இதைத் தூய்மைப்படுத்த அரசாங்கம் ஏதாவது முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, தூய்மை படுத்தப்பட்டுத்தான் வருகிறது. தினம் தினம் கூட்டம் அதிகமாக வருவதால் மாலையிலே தூய்மைப்படுத்தினால் மறுநாள் காலையில் தூய்மை குலைந்து விடுகிறது. இப்படிப்பட்ட கூட்டங்கள் நிரந்தரமாக வரும் பகுதிகளில் தூய்மையைப் பார்க்க முடியாது.

Houses allotted to Industrial workers

*193 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the industrial workers to whom houses have been allotted on rental basis in the Thiru-vi-ka Nagar and in the V.O.C. Nagar, Vyasarpadi, Madras have requested for allotting the respective houses on hire purchase scheme; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலும், 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் திரு. வி. க. நகரில் இருக்கும் தொழிற்சாலை பணியாளர்கள் குடியிருப்புகளை தவணை முறையில் வாங்குதல் அடிப்படையில் (Hire Purchase Basis) தங்களுக்கு ஒதுக்கீடு செய்யக்கேட்டுக்கொண்டார்கள். அவர்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. வ.உ.சி. நகரில் இருக்கும் குடியிருப்பு, குடிசைப்பகுதி முன்னேற்ற திட்டத்தின்கிழ் கட்டப்பட்டது. அந் நகரில் உள்ள எந்த ஒரு தொழிற்சாலை பணியாளரிடமிருந்தும் குடியிருப்புகளை தவணை முறையில் வாங்குதல் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய இந்நாள் வரை கோரிக்கை பெறப் படவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Was the request rejected because the factory owners or the mill owners contributed to the construction of these houses? Did they contribute anything?